# VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION

(Deemed to be University under section 3 of the UGC Act 1956)

**(Accredited by NAAC with 'A' Grade & Ranked in NIRF)**

***வளாகங்கள் : சேலம், சென்னை, புதுச்சேரி மற்றும் காரைக்கால்.***

## விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா மற்றும் நிறுவனர் தினம்

**07 ஜூலை 2023:** விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன நிகர்நிலைப் பல்கலைக்கழகம் (VMRF-DU), அதன் 16வது வருடாந்திர பட்டமளிப்பு விழாவையும், நிறுவனர் தினத்தையும் சேலம் சீரகாப்பாடியில் அமைந்துள்ள விநாயகா மிஷனின் கிருபானந்த வாரியார் மருத்துவக் கல்லூரியின் அன்னபூர்ணா ஆடிட்டோரியத்தில் இன்று சிறப்பாக நடத்தியது. வேந்தர் டாக்டர். ஏ. எஸ். கணேசன் அவர்கள் தலைமை வகித்து, பட்டங்களை வழங்கி உரையாற்றினார். விநாயகா மிஷன்ஸ் அறக்கட்டளையின் அறங்காவலர் திருமதி. அன்னபூரணி சண்முகசுந்தரம், பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் டத்தோ ஸ்ரீ. டாக்டர். எஸ். சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழக இயக்குனர்கள் டாக்டர். அனுராதா கணேசன், டத்தின்ஸ்ரீ. (திருமதி). காமாட்சி சரவணன், திருமதி. அருணாதேவி சந்திரசேகர், துணைத்தலைவர் திரு. என்.வி.சந்திரசேகர், இயக்குனர்கள் திரு. என்.ராமசாமி, திரு.கே.ஜெகநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். மாலை வேளையில் மிகச்சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் பட்டப்படிப்புகளை வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்களுக்கு பட்டங்களும் மற்றும் சிறப்பான மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இப்பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் (டாக்டர்) பி கே சுதிர், அவர்கள் அனைவரையும் வரவேற்று பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையை வாசித்து பல்வேறு நிகழ்வுகள், செயல்பாடுகள் மற்றும் சாதனைகளை விரிவாக விளக்கினார்.

இந்நிகழ்வில் **தலைமை விருந்தினராக** பங்கேற்ற நோபல் அமைதி விருது பெற்ற சாதனையாளரான திரு. கைலாஷ் சத்யார்த்தி, பட்டம் பெற்ற மாணவர்களை பாராட்டி கூறியதாவது: "2023ஆம் ஆண்டில் படிப்பை நிறைவுசெய்து பட்டம் பெறும் மாணவர்கள் அனைவருக்கும் எனது

பாராட்டுக்கள். புதிய பொறுப்புகளை ஏற்பதிலும் மற்றும் உங்கள் கனவுகளை நிஜமாக்க பயணிப்பதிலும் இணைந்து வருகிற வாய்ப்புகளை தயங்காது ஆர்வத்தோடு ஏற்றுக்கொள்ளுங்கள். மகிழ்ச்சிகரமான இத்தருணத்திற்கு உங்களை அழைத்து வந்திருக்கிற பலரின் கூட்டு முயற்சிக்காக உங்கள் நன்றி உணர்வை வெளிப்படுத்துங்கள். வரும் காலத்தில் உங்கள் பயணத்தை நீங்கள் தொடரும்போது தைரியமாக மிகப்பெரிய கனவுகளை காணுங்கள்; உங்களது செயல்திறன் சாத்தியத்தை ஆராயுங்கள், உறுதியான நடவடிக்கையை எடுங்கள். சமூகத்தில் நிலவும் நியமங்களையும், வழக்கங்களையும் கேள்விக்கு உட்படுத்துவது, அதிரடியான மாற்றத்திற்கான பாதையை அமைத்துத் தரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு மிகச்சிறப்பான எதிர்காலத்தை நோக்கிய நமது பயணத்தில் நமக்கு வழிகாட்டக்கூடியவாறு நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களால் நமக்கு தரப்பட்டிருக்கும் தலைமுறைகளைக் கடந்தும் பொருத்தமாக இருக்கிற கொள்கைகளிலிருந்தும், கோட்பாடுகளிலிருந்தும் உத்வேகம் பெறுங்கள்."

தமிழ் அறிஞரும், தொலைக்காட்சி ஆளுமையும், பட்டிமன்ற நடுவருமான பத்மஸ்ரீ கலைமாமணி. பேராசிரியர் எஸ் சாலமன் பாப்பையா அவர்களுக்கு அவரது மகத்தான பங்களிப்பிற்காக கௌரவ முனைவர் பட்டம் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது. பேலியம் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் – தலைவர் மற்றும் வலி தணிப்பு சிகிச்சை மருத்துவரான பேராசிரியர் டாக்டர் எம் ஆர் ராஜகோபால் அவர்களுக்கு இத்துறையில் ஆற்றிய மிகச்சிறப்பான பங்கிற்காக கௌரவ முனைவர் பட்டம் வழங்கப்பட்டது.

**<u>நிகழ்வின் விவரங்கள்:</u>**

இந்த பட்டமளிப்பு விழா நிகழ்வில் வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 3593 மாணவர்கள் பட்டங்கள் பெற தகுதிபெற்றிருந்தனர். **93 முனைவர் பட்டங்கள், 94 தங்கப்பதக்கங்கள், 85 வெள்ளிப்பதக்கங்கள், 74 வெண்கல பதக்கங்கள்** கீழ்வரும் துறைகளைச் சேர்ந்த முதுநிலைப் பட்டதாரிகள் மற்றும் இளங்கலைப் பட்டதாரிகளில் தரவரிசையில் முதன்மை இடங்களைப் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டன. மருத்துவம், பல் மருத்துவம், ஹோமியோபதி, பார்மசி, நர்சிங், பிசியோதெரபி, இன்ஜினியரிங் & டெக்னாலஜி, மேனேஜ்மென்ட், அலைடு ஹெல்த் சயின்சஸ், ஆடியாலஜி & ஸ்பீச் தெரபி, கலை & அறிவியல் மற்றும் உடற்கல்வியியல் ஆகிய பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தங்களது பட்டங்களை இந்நிகழ்வில் பெற்றனர். இப்பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள் இந்நிகழ்வின்போது முன்னிலை வகித்தனர். இப்பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பேராசிரியர் டாக்டர். ஏ. நாகப்பன், தேர்வு கட்டுப்பாடு அலுவலர் டாக்டர். சி. எல். பிரபாவதி,

கல்விசார் செயல்பாடுகளுக்கான இயக்குநர் டாக்டர். ஜே. சபரிநாதன் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற அதிகாரிகள் இந்நிகழ்விற்கு சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்(**VMRF) நிகர்நிலைப்பல்கலைக்கழகம் குறித்து**

விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம் (VMRF) பல்வேறு துறைகளை உள்ளடக்கிய பல்கலைக்கழகமாக தென்னிந்தியாவில் பல நகரங்களில் உயர்கல்வியை வழங்கிவரும் கல்வி குழுமமாகும். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி என்ற 2 மாநிலங்களில் நான்கு கல்வி வளாகங்களில் 13 உறுப்பு கல்லூரிகளையும் மற்றும் 12 உயர் கல்வி பள்ளிகளையும் இப்பல்கலைக்கழகம் கொண்டிருக்கிறது. மருத்துவம், பல் மருத்துவம், ஹோமியோபதி, பார்மசி, நர்சிங், பிசியோதெரபி, இன்ஜினியரிங் & டெக்னாலஜி, மேனேஜ்மென்ட், சட்டம், அலைடு ஹெல்த் சயின்சஸ், ஆடியாலஜி & ஸ்பீச் தெரபி, கலை & அறிவியல் மற்றும் உடற்கல்வியியல் ஆகிய பிரிவுகளில் இளங்கலை, முதுகலை, முனைவர் மற்றும் முனைவர் பட்டத்திற்கு பிந்தைய கல்வித்திட்டங்களை 15000-க்கும் அதிகமான மாணவர்களுக்கு இது வழங்கிவருகிறது. NAAC-ஆல் “A” தர பல்கலைக்கழகமாக திகழும் இது இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையால் அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி நிறுவனமாக (SIRO) அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

3000-க்கும் கூடுதலான படுக்கை வசதிகள் கொண்டு இயங்கிவரும் தனது NABH அங்கீகாரம் பெற்ற மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் வழியாக சமூக நலனை குறிக்கோளாகக் கொண்டு மருத்துவ சிகிச்சை பராமரிப்பை வழங்குவதில் இப்பல்கலைக்கழகம் எப்போதும் அக்கறையோடு செயல்பட்டு வருகிறது. அத்துடன், இதன் பொறியியல் கல்லூரிகள், 2021 & 2022 ஆண்டுகளில் ARIIA (கல்வி நிறுவனம் சார்ந்த புத்தாக்க சாதனைகளில் அடல் தரவரிசை)-ல் “Excellent Band” என்ற தரநிலையை பெற்றிருக்கின்றன. 2023 ஆம் ஆண்டு என் ஐ ஆர் எப் – இன்னோவேசன் தர வரிசையில் இந்திய அளவில் *50* முதல் *100* இடங்களை இப்பல்கலைக் கழகத்தின் உறுப்பு கல்லூரிகளான பொறியியல் கல்லூரிகள் பெற்றுள்ளது.

**Dr. Kailash Satyarthi, Chief Guest Speech in 16th Convocation 2023 of VMRFDU :**
**https://youtu.be/PaHdRqjluDU**

**Padmashri Dr.Mr.Rajagopal receives Honoris Causa At Vinayaka Mission's Research Foundation :**
**https://youtu.be/jtyRWkyBzKg**

**Padmashri Prof.Solomon Pappaiah receives Honoris Causa At Vinayaka Mission's Research Foundation : https://youtu.be/QvuiFwye1qY**

**16th Convocation 2023 - Vinayaka Mission's Research Foundation :**
**https://youtu.be/TbNBRbbmCc0**

பேராசிரியர் டாக்டர். ஏ. நாகப்பன்
பதிவாளர்


DATE :
7.07.2023
SIXTEENTH
MISSIONS


DATE :
07.07.2023




## News Paper Cutting – Published



**VINAYAKA MISSION'S RESEARCH FOUNDATION**

(Deemed to be University under section 3 of the UGC Act 1956)

Sankari Main Road (NH-47), Ariyanoor, Salem - 636 308, Tamilnadu.

**SIXTEENTH CONVOCATION NOTIFICATION 2023**

The XVI Annual Convocation of the Vinayaka Mission's Research Foundation (Deemed to be University) will be held on Friday, 07.07.2023 at 4.00 pm. The candidates who have successfully completed the courses from this University are eligible to receive the Degree Certificates. The candidates are directed to apply in the prescribed application form. For further details visit the University website **www.vmrfdu.edu.in**

| | |
|---|---|
| Last date for receipt of the applications | : 23.06.2023 |
| Last date for receipt of the applications with fine | : 30.06.2023 |

REGISTRAR



தினத்தந்தி

சேலம் சீரகாபாடி

**விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகத்தில் 3,593 பேருக்கு பட்டம்**

**நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தி வழங்கினார்**